# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## முதலாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2021

FWC

**சித்திரக்கலை - I**
**Art - I**

**Gr. 12 (2022)**

**Three Hours**

சுட்டெண் : ..................................

அறிவுறுத்தல்கள் :
- ❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.


பகுதி - I
- ➢ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.
- ➢ ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

பகுதி - II
- ➢ நான்குவினாக்களுக்கு விடை எழுதுக.
- ❖ பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |

## பகுதி - I

❖ *01* தொடக்கம் *05* வரையான வினாவுக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை **A, B, C,D, E** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் செதுக்கல்களின் படங்களிலிருந்து தெரிவு செய்க.


A


B


C


D


E

01. A என்ற எழுத்தினால காட்டப்பட்டுள்ளது.
   (1) நவீன மரபில் வரையப்பட்டுள்ள ஓவியம்
   (2) வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதனின் கைப்பதிவு
   (3) சிறுவர் சித்திரங்களின் பகுதி
   (4) சடங்கு முறைக்கான ஓவியம்
   (5) புகழ் பெற்ற பிக்காசோவின் ஓவியம் (............)

02. B என்ற எழுத்தினால் காட்டப்படும் ஓவியத்தின் சிறப்பாக கருதப்படுவது
   (1) கிறிஸ்தவ கதையினை சிறப்பாக காட்டியுள்ளமை
   (2) மனித உருவங்களில் மெய்நிலை சிறப்பாக காட்டப்பட்டுள்ளமை
   (3) தொனிப்பொருளில் இடம்பெறும் உருவங்களையும், பின்னணியையும் இலங்கைக்குரியதாக சித்தரித்தமை
   (4) தூரதரிசன நுட்பத்தை சிறப்பாக காட்டியமை
   (5) வரையறுக்கப்பட்ட ஒரு சில வர்ணங்கள் பயன்படுத்தியமை மூலம் சிகிரிய ஓவிய சாயலை வெளிப்படுத்தியமை. (............)

03. C எழுத்தால் காட்டப்பட்டிருக்கும் ஓவியம்.
(1) இந்திய ஓவியரான ஜெமிராயின் ஓவியம்
(2) இந்திய ஓவியரான இரவிவர்மாவின் ஓவியம்.
(3) இந்திய ஓவியரான நந்தலா போசின் ஓவியம்
(4) இந்திய ஓவியரான அமர்தா சேக்கிளின் ஓவியம்
(5) இந்திய ஓவியரான கிருஸ்ண மூர்த்தியின் ஓவியம். (...........)

04. D எழுத்தினால் காட்டப்படும் ஓவியம் எடுக்கப்பட்டது.
(1) களனி புதிய விகாரை அமைப்பின் ஓவியங்களில் இருந்தாகும்.
(2) பெல்லன்வில புதிய விகாரை அமைப்பின் ஓவியங்களில் இருந்தாகும்.
(3) மாளிகாவத்தை வித்யோதய பிரிவெனா விகாரை அமைப்பின் ஓவியங்களில் இருந்தாகும்.
(4) சேதவத்தை தாதுகோப மேடு விகாரை அமைப்பின் ஓவியங்களில் இருந்ததாகும்.
(5) திம்பிரிகஸ்யாய அசோக்காராம விகாரை அமைப்பின் ஓவியங்களில் இருந்ததாகும். (...........)

05. E எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ‘சீதா டி சேரம்'' என்ற ஓவியம்,
(1) டியூடர் ராஜபக்ஷவின் நிர்மாணிப்பாகும்
(2) ஏ.சீ.ஜீ.எஸ் அமரசேக்கரவின் நிர்மாணிப்பாகும்.
(3) ஜெ.டி.ஏ. பெரேராவின் நிர்மாணிப்பாகும்.
(4) ஜஸ்டின் தெரணியகலவின் நிர்மாணிப்பாகும்.
(5) ஹெரி பீரிசின் நிர்மாணிப்பாகும். (...........)

❖ ***06 தொடக்கம் 10 வரையுள்ள கூற்றுக்களைப் பூரணப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான வாக்கியத்தை விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழே கோடு இடுக.***

06. சுவரொட்டிச் சித்திரத்தினுள் விசேடமாகக் காணப்பட வேண்டியது,
(1) செய்தி வேகமாகவும் தெளிவாகவும் குறியீட்டுத் தன்மையுடையதாகவும் இருத்தல்.
(2) தட்டையான நான்கு வர்ணங்களைக் கொண்டிருத்தல்.
(3) பிரகாசமான வர்ணமும் இயற்கையான வடிவமைப்பையும் பயன்படுத்தல்.
(4) வடிவங்கள் வேறாகும் வகையில் வெளிக் கோடுகளைப் பயன்படுத்தல்.
(5) சமதள அச்சு முறையில் அச்சுப்பதித்தல் செய்ய முடிதல். (...........)

07. பொருட்கூட்டம் பார்த்து வரையக் கற்றலின் நோக்கமானது,
(1) சுதந்திரமான இரேகை மூலம் பொருட்களின் இயல்பை வெளிப்படுத்தல்.
(2) இரேகை தொடர்பான தேர்ச்சியைப் பெறுதல்.
(3) பொருட்களின் இயல்புகளை ஆக்கச் சிறப்புடன் வரைவதற்குப் பழகிக் கொள்ளல்.
(4) அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிய விளக்கத்தைப் பெறுதல்.
(5) வர்ணப் பயன்பாட்டின் திறனைப் பெறுதல். (...........)

08. குஷன் சுவருக்கு அல்லது மேசைத் துணிக்கு மிகப் பொருத்தமான அலங்காரமானது,
(1) நவீன வடிவமைப்புக்களைக் கொண்ட பரவுரூப அலங்காரம்.
(2) குறித்த வடிவத்தின் உள்ளே பூரணப்படுத்தப்பட்ட முழுத்தள அலங்காரம்.
(3) குறுக்கு வரியுடன் கூடிய அலங்காரத்தின் மூலம் பூரணமான கோல அலங்காரம்.
(4) அப்பிளிக் முறையில் அல்லது அச்சுப் பதித்தல் மூலம் பூரணப்படுத்தப்படக் கூடிய அலங்காரம்.
(5) அலங்கரிக்கப்பட்ட இருபரிமாண வடிவம் கொண்ட கோல அலங்காரம். (...........)

09. கிறபிக் முறையில் உருவாக்கத்துடன் தொடர்புடையது,
(1) சீத்தைத் துணி வடிவமைப்பு (2) மரச்செதுக்கல் வடிவமைப்பு
(3) புடவை ஓவிய வடிவமைப்பு (4) புத்தக முகப்புற வடிவமைப்பு
(5) வார்ப்பு சிற்ப வடிவமைப்பு (...........)

10. அயல் வர்ணம் என்பது,
(1) பிரகாசமான வர்ணங்களில் தொகுதியாகும்
(2) பிரகாசமான இருள் வர்ணங்களில் சாயலாகும்.
(3) இணைந்து செல்லும் வர்ணம், ஒன்றுடன் ஒன்று ஒத்த வர்ணங்களாகும்.
(4) வர்ணச் சக்கரத்தில் எதிரெதிரே உள்ள வர்ணங்களாகும்.
(5) வெப்ப வர்ணங்களின் தொகுதியாகும். (...........)

❖ **வினாஇலக்கம் *11* தொடக்கம் *15* வரை கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையினை கீழ்தரப்பட்ட *1* தொடக்கம் *8* வரையுள்ள படங்களில் இருந்து தெரிவு செய்க**






| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|






| 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|

11. அனுராதபுரக்கால பிரசித்திபெற்ற தாதுகோபங்களை காட்டும் உருக்கள்.
*(1) 1,2,5,6,7* *(2) 3,4,5,7,8* *(3) 2,3,4,6,7* *(4) 1,2,5,7,8* *(5) 4,5,6,7,8* (............)


12. பிரசித்திபெற்ற வாகல்கடத்தை வெளிப்படுத்துகின்ற உரு
*(1) 1* *(2) 3* *(3) 2* *(4) 7* *(5) 4* (............)

13. வட்டதாகே அமைப்பின் எஞ்சிய பகுதியைக்காட்டும் உருக்கள்.
*(1) 2,5* *(2) 2,6* *(3) 1,7* *(4) 5,8* *(5) 7,8* (............)

14. விகாரையொன்றினுள் காணப்படும் தாதுகோபத்தைக் காட்டும் உரு.
*(1) 5* *(2) 8* *(3) 3* *(4) 2* *(5) 4* (............)

15. நிசங்கமல்ல மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட தாதுகோபத்தைக் காட்டும் உரு
*(1) 5* *(2) 3* *(3) 1* *(4) 2* *(5) 4* (............)

➢ ***36 - 40* வரை கீழே தரப்படும் நிழற்படத்தைத் தொடர்புபடுத்தி கேட்கப்படும் வினாக்களிற்குரிய பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக.**



*16)* இவ்வோவியம் காணப்படும் இடம்
(1) களனி புதிய விகாரை (2) பெல்லன்வல விகாரை (3) கொழும்பு கலாபவனம்
(4) கண்டி திருநிற்றி தேவாலம் (5) கொழும்பு சுகந்திர வர்த்தக வலயம் (............)

17) இந்நிர்மாணிப்பினை கருப்பொருளாக ஏற்றுக் கொள்ளக் கூடியது,
(1) வெற்றிகரமாக ஜெருசலத்தினுள் பிரவேசித்தல்
(2) நல்ல சமாரியன்
(3) பாதகாணிக்கை
(4) யேசுநாதர் சிலுவையில் அறையப்படல்
(5) கல்வாரிமலைக்கான புனித பயணம்

(...........)

18) இவ் ஓவியம்,
(1) ஓவியர் சோளியஸ் மென்டிசின் தூரிகையின் மகிமையை எடுத்துக்காட்டுவதாகும்.
(2) சோமபந்து வித்தியாபதியின் உருவமைப்பின் மகிமையைய எடுத்துக்காட்டுவதாகும்.
(3) அல்பட் தர்மசிரியின் பெறுமதி மிக்க விகாரைச் சுவர் ஓவியமாகும்.
(4) ஓவியர் எம். சார்லிசின் விகாரைச் சித்திரக் கலையின் நன்மதிப்பினை எடுத்துக் கூறும் ஓவியமாகும்.
(5) டேவிற் பெயின்டரின் கன்வஸ் ஓவியங்களுள் பெறுமதி மிக்க நிர்மாணிப்பாகும்.

(...........)

19) இவ் ஓவியத்தின் வர்ணப் பயன்பாடு பற்றி ஆராயும் போது தெரிய வருவது,
(1) பிரகாசமான வர்ணப் பயன்பாட்டினைத் தவிர்த்து, இருண்ட வர்ணங்களின் மூலம் ஓவியத்தின் ஆழத்தினை வெளிப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட ஒரு முயற்சி ஆகும்.
(2) பிரகாசமான வர்ணங்கள் ஊடாக ஐரோப்பிய அக்கடமி யதார்த்த சித்திரக்கலையில் இருந்து வேறுபட்ட வர்ணப்பயன்பாடாகும்.
(3) தொனிப்பொருளின் பொருத்தப்பாட்டுடனும் தொகுப்பு வர்ணங்களின் பயன்பாட்டினால் செய்யப்பட்ட உணர்வு பூர்வமான வெளிப்பாடு ஆகும்.
(4) வர்ணங்களின் குணப் பண்புகள் வெளிப்படுமாறு தெளிவாகத் தோன்றும் வர்ணங்களை ஒன்றுடன் ஒன்று பொருந்தச் செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி ஆகும்.
(5) வெப்ப வர்ணங்களின் வகைகள் சரியான ஒழுங்குகளுக்கமைய கையாளப்பட்ட ஓவியமாகும். (...........)

20) இவ் ஓவியத்தின் வெளிப்பாட்டினதும் தொகுப்பினதும் சிறப்பம்சம்,
(1) மனித உருவங்களின் ஆடை அணிகலன்களை நோக்கும் போது நடன, நாட்டியக் கலையின் செல்வாக்குப் பெற்றுள்ளமை தெரிகிறது.
(2) இவ் ஓவியத்தின் மூலம் வெளிப்படுகின்ற அழகிய தன்மை கிராமியக் கலைகளினதும் உயர்தரமான சித்திரக் கலையினதும் ஒன்றிணைப்பாகத் தெரிகிறது.
(3) மனித உருவங்களில் விழுமியப் பண்புகளையும் அபிநயங்களையும் காணக்கூடிய தாகவுள்ளது.
(4) கிறிஸ்தவ சித்திரக் கலைக்குப் புதிய கருத்தொன்றினை வழங்கி, உணர்வு பூர்வமான, உயிரோட்டமான, மென்மையான உடல்நிலைகளைக் கொண்ட மனிதவுருவங்களை சித்தரித்தமை.
(5) சிகிரியா பரம்பரையினர் நாட்டிற்கு அறிமுகப்படுத்திய ரேகைகளின் நளினம் மீண்டும் இவரது ஓவியங்களில் சேர்க்கப்பட்ட சந்தர்ப்பமாகும். (...........)

## பகுதி – II

❖ **விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

01. **ஐரோப்பிய யதார்த்த வாத மற்றும் அக்கடமி யதார்த்த வாத மரபுளை உள்வாங்கி இலங்கையின் ஓவியக்கலையின் வளர்சிக்கு பங்களிப்பாற்றிய பழைமையான நிறுவனங்களில் இலங்கைச் கலைச்சங்கமும் ஒன்றாகும்**

(i) J.D.A பெரேராவின் சிறப்பு வாய்ந்த இரு ஓவியங்களின் பெயரினைத் தருக. *(2 புள்ளிகள்)*

(ii) ஐரோப்பிய யதார்த்த வாத மற்றும் அக்கடமி யதார்த்த வாத ஓவியப்பண்புகளை சுருக்கமாக குறிப்பிடுக. *(5 புள்ளிகள்)*

(iii) ஏ.சீ.ஜீ.எஸ் அமரசேகர முதலியாரின் வேலையின்மை / தச்சனின் வீடு என்ற ஓவியத்தை பின்வரும் விடயங்களை அடிப்படையாக கொண்டு மதிப்பிடுக.

**(அ) செல்வாக்கு**

**(ஆ) ஒழுங்கமைப்பு**

**(இ) கலைப்பண்புகள்**

**(ஈ) வர்ணப்பயண்பாடு** *(8 புள்ளிகள்)*

02. **வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர் தாம் வசித்த குகைகளின் மேற்பரப்பிலும், பாறைகளிலும் ஓவியங்களை வரைந்துள்ளனர்.**

(i) இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்கள் காணப்படும் இரண்டு இடங்களை குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட கால கலைஞர்கள் இவ்வோவியங்களை வரைந்தமைக்கான காரணங்களை சுருக்கமாக குறிப்பிடுக. *(5 புள்ளிகள்)*

(iii) இலங்கை வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்களை பின்வரும் விடயங்களை அடிப்படையாக கொண்டு விமர்சிக்குக.

(அ) **விடயப்பொருள்**

**(ஆ) உருவமைப்பு**

**(இ) வரைநுட்பமுறை** *(8 புள்ளிகள்)*

03. **இறப்பின் பின் வாழ்வு என்ற அடிப்படையில் எகிப்தியக் கலை வளர்ச்சி பெற்றது.**

(i) எகிப்திய சிலைகள் இரண்டின் பெயரினை எழுதுக. *(2 புள்ளிகள்)*

(ii) மஸ்டப்பா (Mastap), கா (Ka) என்ற எண்கருக்களை தொடர்புபடுத்தி சுருக்கமான விமர்சனத்தை முன்வைக்குக. *(5 புள்ளிகள்)*

(iii) பிரமிட்டின் (Pyramid) உட்புற சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டமைக்கான காரணத்தைக் குறிப்பிட்டு, அவற்றின பண்புகளையும் விமர்சிக்குக. *(8 புள்ளிகள்)*

04. **சிந்துவெளி மக்கள் பல்வேறு ஊடகங்களை பயன்படுத்துவதில் கைதேர்த்தவர்கள் என்பதை அவர்களது படைப்புகள் காட்டுகிறது.**

(i) சிந்துவெளி கலைஞர் சிற்பாக்கத்திற்கு பயன்படுத்திய ஊடகங்கள் இரண்டு தருக. *(2 புள்ளிகள்)*

(ii) சிந்துவெளி மக்களின் குடியிருப்பு கட்டமைப்பு பற்றி சுருக்கமாக விமர்சிக்குக. *(5 புள்ளிகள்)*

(iii) மொகஞ்சாரோவில் கண்டுபிடிக்கப்பட்ட நடனப் பெண் சிலையின் **அழகிய அம்சங்கள், ஊடக கையாளுகை** தொடர்பாக விமர்சனம் ஒன்றை முன்வைக்குக. *(8 புள்ளிகள்)*

05. **கீழைத்தேய, மேலைத்தேய தழுவல்களுடன் சில ஓவியர்கள் கொழும்புநகர் காலத்தில் பௌத்த விகாரை சுவர் ஓவிய மரபிற்கு புத்துயிர்ப்பளித்தனர்.**

(i) சோமபந்து வித்தியாபதியின் பென்லன்வல விகாரையோவியங்கள் இரண்டைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

(ii) M. சார்ரிலிஸ் பௌத்த மத மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை சுருக்கமாக குறிப்பிடுக. *(5 புள்ளிகள்)*

(iii) புத்த பெருமானின் மகியங்கனை வருகை என்ற புதிய களனி விகாரை ஓவியத்தை பின்வரும் விடயங்களை அடிப்படையாக கொண்டு மதிப்பிடுக.

**(அ) செல்வாக்கு**

**(ஆ) ஒழுங்கமைப்பு**

**(இ) கலைப்பண்புகள்**

**(ஈ) வர்ணப்பயண்பாடு** *(8 புள்ளிகள்)*

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2021**
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 1st Term Examination - 2021


**சித்திரக்கலை - II**
**Art - II**

**Gr. 12 (2022)**

**Three Hours**

மேற்பார்வையாளருக்குரியது.

நிலை பொருட்ட வரைதல்



**ஒழுங்குபடுத்தவேண்டிய பொருட்கள்**

1. பெட்டி
2. பப்பாசிப்பழம்
3. மண்சாடி
4. ஐந்தூரியம்
5. துணி

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## முதலாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 1st Term Examination - 2021

FWC

**சித்திரக்கலை - II**
**Art - II**

**Gr. 12 (2022)**

**Three Hours**

*அறிவுறுத்தல்கள் :*

- ✶ **உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக.**
- ✶ ***விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையயளிக்கும் போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.***

**இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள்கூட்டமும்**

❖ **பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன்கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணந் தீட்டுக.**

- ✶ கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.
- ✶ பொருள்களினதும் செடியினதும் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.
- ✶ பொருள்தொகுதி உமக்குத் தெரிகின்ற விதத்தில் வரைந்து அதன் மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந் தீட்டுக.
- ✶ வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன் படுத்துக.
- ✶ பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.
- ✶ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## முதலாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2021

FWC

| | | |
|---|---|---|
| **சித்திரக்கலை - III**<br>**Art - III** | **Gr. 12 (2022)** | **Three Hours** |

**கவனிக்க :**

- ✶ நீங்கள் ஒரு சித்திரத்தை மாத்திரம் வரைய வேண்டும்.
- ✶ உங்கள் சுட்டெண்ணையும் உரிய வினா இலக்கத்தையும் விடைத்தாளின் பிற்பாக்கத்தில் உள்ள கோட்டில் தெளிவாக எழுதுக.
- ✶ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும் போது உங்கள் சித்திரம் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளுதல் உங்களுக்குப் பிரதிகூலமாக அமையலாம்.
- ✶ வர்ணந் தீட்டுவதற்கு நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பெஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக்கொள்ளாத எவ்வகை வர்ண ஊடகத்தையும் பயன்படுத்தலாம். (பெல்ற் பேனையைப் பயன்படுத்துதல் உகந்ததன்று)
- ✶ வரைவதற்கு வெள்ளைத் தாளும் தேவையானவர்களுக்குத் திசுத் தாளும் வழங்கப்படும்.

**“அ”, “ஆ”, “இ” பகுதிகளிலிருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவு செய்க.**

### பகுதி அ சித்திர ஒழுங்கமைப்பு

1. பாடசாலை இடைவேளை நேரம்
2. திறந்த வெளியொன்றில் மதிய உணவருந்தும் யாத்திரிகர் குழுவினர்
3. கிராமிய வழிபாடும் பக்தர்களும்
4. வயல் வேலையில் ஈடுபட்டிருக்கும் பெண் விவசாயிகள்

### பகுதி ஆ அலங்கார ஆக்கம்

5. மரபுரீதியான அலங்கார அலகுகளை பயன்படுத்தி வட்ட வடிவான பித்தளைத் தட்டொன்றைச் செதுக்குவதற்குப் பொருத்தமான அலங்காரமொன்றைத் திட்டமிட்டு வர்ணந்தீட்டுக.
6. சீத்தைத் துணியொன்றை அச்சுப்பதிப்பதற்காகப் பரவலடையும் விதத்தில் 9ஓ9 அங்குல அளவுடைய அலங்காரப் பகுதியொன்றை கற்பனை மலரொன்றைக் கொண்டு நிர்மாணிக்குக. (பொருத்தமான அளவிடைக்கமைய வரையலாம்)
7. பிராணிகளின் மூட்டற்ற உருவங்களைக் கொண்டு பத்திக் முறையில் வர்ணமிடத்தக்க 3ஓ2அடி அளவிலான சுவர் அலங்காரமொன்றை நிர்மாணிக்குக.

### பகுதி இ கிறபிக் சித்திரம்.

8. “சிறந்த ஆரோக்கியத்துக்காக நற்பழக்கங்களை பேணுவோம்” என்ற தலைப்பில் வர்ண போஸ்ரர் ஒன்றை நிர்மாணிக்குக.
9. பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்றின் போது விநியோகிக்கப்படுகின்ற கையேட்டின் முன் பக்கத்தை அலங்கரிப்பமற்கான கிறபிக் சித்திரமொன்றை நிர்மாணிக்குக.
10. புத்தாண்டு வாழ்த்துக்கான வாழ்த்துமடல் ஒன்றை நிர்மாணிக்குக.